# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 112/2023 தேதி-28.03.2026

(P.W.1) . ரசல்ராஜ்

## குறுக்கு விசாரணை

நான் வழக்கறிஞர் என்பதைக் காண்பிக்கக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதிகள் அனைவரும் எனக்கு இழப்பீடு தரவேண்டும் என பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய வழக்கின்படி சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் 1 ஆம் பிரதிவாதி அங்கு இல்லை என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி அரசு அதிகாரி என்பதால்தான் இந்த வழக்கில் அவரை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் 2 முதல் 4 பிரதிவாதிகள் உயர்அதிகாரி 1 ஆம் பிரதிவாதி என்பதால் அவரை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்யும் முன்பு பிரிவு 80 சிபிசி யின்படி மாவட்ட ஆட்சியருக்கோ, தமிழ்நாடு அரசின் செயலாளருக்கோ அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

தமிழ்நாடு அரசின் பிரதிநிதியான மாவட்ட ஆட்சியரை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் பிரிவு 80 சிபிசி அறிவிப்பு எதற்காக அனுப்பவில்லை என்பதற்கான காரணமும் அனுப்பாமல் அவசரமாக தாக்கல் செய்யப்பட்டதற்கான காரணமும் கூறவில்லை என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகளின் பெயரில் எந்த குற்றவியல் வழக்கு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. மற்றும் அவர்கள் மீது தனிநபர் வழக்கோ, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவு கேட்டு மனுவோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கவோ மற்றும் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கோ தமிழக அரசு செயலாளருக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ- 2 ஆவணத்திற்றும் மற்றும் தாக்கல் செய்த வழக்கிற்கும் மற்றும் திருத்தப்பட்ட வழக்குரை மற்றும் சத்தியபிரமாண வாக்குமூலத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் வரிசை மட்டும்தான் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகளின் வரிசை மாறும்போது ஒவ்வொரு

பிரதிவாதிக்கு எதிராக கூறப்படும் குற்றச்சாட்டுகளும் மாறுபடும் என்றால் சரிதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் ஏன் ஒன்றுக்கொன்று முரண்பாடு ஏற்பட்டது என்று நான் கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் 3 ஆம் பிரதிவாதி என்னை தடுத்ததாகவும் ஆர்சி புத்தகத்தை கேட்டதாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது திருத்தப்பட்ட வழக்குரையில் 4 ஆம் பிரதிவாதி என்னை தடுத்ததாகவும் ஆர்சி புத்தகத்தை கேட்டதாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

எனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் எனது வாகனத்தை யார் தடுத்தார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் சொல்லியுள்ள சம்பவங்களை யார் யார் பார்த்தார்கள் என்று கூறவில்லை என்றால் சரிதான். என்னுடன் இருந்ததாக சொல்லப்படும் வழக்கறிஞர்களின் பெயரை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 03.12.2022 அன்று நான் மருந்து வாங்க சென்றதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தை நிரூபிக்க புகைப்படமோ, சிசிடிவி கேமரா பதிவோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் என்னுடைய செல்போனை பறித்ததாக நான் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். எவ்வளவு நேரம் சம்பவம் நடந்திருக்கும் என்றால் 5 நிமிடம் இருக்கும் அதன்பிறகு ஒருமணி நேரம் என்னை காக்க வைத்தார்கள்.

மேற்படி ஒருமணி நேரம் என்னுடன் 2 முதல் 4 பிரதிவாதிகள் இருந்தனர் என்றால் சரிதான். உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் எனது செல்போனில் வீடியோ அல்லது புகைப்படம் எடுத்திருப்பேன் என்றால் எனது வாகனத்தை நிறுத்திவிட்டு ஒருமணி நேரம் காத்திருந்தேன் அதற்காக எந்த வீடியோ பதிவும் என்னால் தாக்கல் செய்ய முடியாது. நான் ஓட்டி சென்றதாக சொல்லப்படும் எந்த வாகனத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் பிரதிவாதிகள் அனைவரும் என்னை ஒருமையில் பேசியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் எனது வண்டியை அங்கிருந்த வேறுவழக்கின் accused நகர்த்தி வைத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

பொதுவாக வாகன தணிக்கையின்போது உரிய ஆவணங்கள் இல்லாமல் இருக்கும் வாகனத்தை போக்குவரத்து காவலர்கள் மற்றும் காவலர்கள் வழக்கு பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் அன்று என்மீது எந்த

வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வாகனத்தை சட்டப்படியாக கையகப்படுத்தவில்லை என்றால் சட்டத்திற்கு முரம்பாக கையகப்படுத்தினார்கள்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**